**சில நிறுவணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு**
**சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பது**

ரெஃப்.டிபிஓடி எண் டிஐஆர்.பிசி.51/13.03.00/2002-03 டிசம்பர 14, 2002

அனைத்து வணிக வங்கிகளுக்கும்
(பிராந்திய கிராம வங்கி மற்றும் வட்டார வங்கிகள் நீங்கலாக)

அன்புடையீர்,

**சில நிறுவணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு**
**சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பது**

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களையும் செயல்முறைகளையும் நிறைவேற்றிட கொடை மற்றும் மானியம் பொறுவதை ஏற்றிட சில நிறுவணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு வங்கிகளில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்திட அரசுத்துறைகள் அனுமதிக்கப்பட்ருக்கின்றன என்றும் அந்தந்த அரசுத்துறைக்களின் இசைவாணைக் கடிதம் கொடுக்கப்படவேண்டும் என்பது டிபிஓடி எண் டிஐஆர்.பிசி.35 /13.03.00/ 2002-03 அக்டோபர் 17, 2000ன் சுற்றரிகையில் பத்தி 2ல் பார்கக்வும்.

2. மேற்கண்ட விஷயத்தை பரிசீலித்த பிறகு, மாநில அரசின் பல்வேறு திட்டங்களையும் செயல்முறைகளையும் நிறைவேற்றிட கொடை மற்றும் மானியம் பெறுவதை ஏற்றிட சில நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு வங்கிகளில் சேகிப்பு கணக்கு ஆரம்பித்திட அனுமதி அளிக்கலாம். அதற்கு அவர்கள அந்தந்த துறைகளிடமிருந்து சேமிப்பு கணக்கு தொடங்க அனுமதிக்கும் அத்தாட்சிச் சான்றிதழ் கொண்டு வர மேண்டும். அதற்கேற்ப எங்களின் தலைமைக் கட்டளை டிபிஓடி எண் டிஐஆர்.பிஸி.07/13.03.00/2001-02 2001 ஆகஸ்ட் 11 தேதியிட்ட இணைப்பு Vல் பகுதி (7) திருத்தம் செய்யப்படுகிறது.

3. திருத்தம் பற்றிய உத்தரவு டிபிஓடி எண் டிஐஆர்.பிஸி.50/13.03.00/ 2001-02 டிசம்பர 14, 2002 இணைக்கப்ப்ட்டுள்ளது.

4. பொற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

தங்ளின் நம்பிக்கைக்குரிய

எம்.ஆர்.சீனிவாசன்
த்லைமைப் பொது மேலாளர்

**சில நிறுவணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு**
**சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பது**

REF NO.DBOD.DIR.BC 50/13.03.00/2002-03 டிசம்பர 14, 2002

**சில நிறுவணங்கள் மற்றும் அமைப்புகளுக்கு**
**சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பது**

வங்கி கட்டுப்பாடு சட்டம் 1949 பிரிவு 35A மற்றும் 21 அளிக்கும் அதிகாரங்களின்படி தலைமைக் கட்டளை டிபிஓடி எண் டிஐஆர்.பிசி.07/13.03.00/2001-02 ஆகஸ்ட் 11ம் தேதியிட்ட 2001 சுற்றறிக்கை, ரிசர்வ் வங்கி பொது நல நோக்கில் அவசியம் மற்றும் அவசரம் என்று கருதும் பட்சத்தில் அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டு இணைப்பு Vல் பகுதி (7) கீழ்கண்டவாறு மாற்றீடு செய்யப்பட்டு உடனடி அமலுக்கு வருகிறது.

(7) மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஆதரவில் நடத்தப்படும் பல்வேறு திட்டங்களையும் செயல்முறைகளையும் நிறைவேற்றிட அரசின் பல்வேறு துறைகள், அமைபுக்கள் மற்றும் நிறுவனங்கள், கொடை மற்றும் மானியம் பெற்றிட முறையான அத்தாட்சியுடன் வரும்பொழுது சேமிப்பு கணக்கு தொடங்க அனுமதிக்கலாம்.

கட்டளை டிபிஓடி எண் டிஐஆர்.பிசி.07/13.03.00/2001-02 2001 ஆகஸ்ட் 11, 2001ன் மற்ற அனைத்து ஷரத்துகளிலும் எந்த மாற்றமும் இல்லை.

கே.எல். கேட்டர்பால்
செயல் இயக்குநர்